**கவனிக்க.**- 26.09.2025 ஆந் திகதிய 2456 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2457 - 2025 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2025.10.03

2457 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1692 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1699 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1689 - B 82725- 403 (2025/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பொதுச் சேவை ஆணைக்குழு

### பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவை வகுப்பின் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் நிறைவேற்றுச் சேவையின் III ஆம் தரம் பதவியின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் வெற்றிடத்தினைப் (01) பூரணப்படுத்துவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை :**

பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலமாக மேற்கொள்ளப்படும் தகைமை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப் படையில், இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுள் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள) புள்ளி வழங்கும் நடைமுறைக்கமைவாக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் செல்லுபடியாகும் திகதியை பொதுச் சேவை ஆணைக்குழு தீர்மானிக்கும்.

02. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்விசார் / தொழில்சார் தகைமைகள் :**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி யொருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம் :**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பிறகு மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத காலம் தொழில் முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (செயலில் தொழில்முறை அனுபவத்தினை சான்று சரிபார்ப்புக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில் பெறப்பட்ட அனுபவக் காலம், சான்றுப்படுத்தியவரின் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் சான்றுப்படுத்திய திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்).

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அரச நிறுவனமொன்றில் சட்டம் சார்ந்த பதவியொன்றில் மூன்று (03) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத் தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(செயலாளர் /திணைக்களம்/நிறுவனத்தின் பிரதானி யினால் விநியோகிக்கப்பட்ட கடிதத்தினூடாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்).

**குறிப்பு** : அடிப்படைத் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களில் விண்ணப்பதாரியினாலேயே சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பப்படி வத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக் காலத்தின் ஆரம்பம் மற்றும் இறுதித் திகதியை தெளிவாகக் குறிப்பிட்டு சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறி விப்பு இல்லாமல் நிராகரிக்கப்படலாம்.

* ஒரு சட்டம் சார்ந்த பதவி என்பதானது சட்டப் பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பதவியேற்றிருப்பது ஆட்சேர்ப்புக்கான அடிப் படைத் தகுதியாகும்.

(iii) **உடல் ஆரோக்கியம் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
- விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் பதவிக்கு இணைத்துக் கொள்வதற்குத் தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

03. பதவியில் பணியாற்றச் செய்வதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உரித்துடையது. உங்களுக்குரிய ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும். நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கும் விதமாக தங்களால் அதற்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு ஏற்ப உரிய ஏனைய அரச கரும மொழியில்/அரச கரும மொழிகளில் புலைமையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(iv) பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை சார்ந்த விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குமுறைகளுக்கும் அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்குமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றுடன் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படுகின்ற திருத்தங்களுக்கும் நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

(v) விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றம் செய்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது என்பதுடன், நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியுடைய மொழியாக இருப்பது, உங்களால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் மொழியாகும்.

04. **வயதெல்லை :**

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்பதுடன், 45 வயதை விட அதிகரிக்காதிருக்கவும் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டமானது ரூபா 82,150.00 -10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூபா 195,970.00 (SL 1-2025) ஆகும்.

06. **தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வில் பின்வரும் விதமாக புள்ளிகள் வழங்கப்படும்.**

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதி கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்:**<br>குறிப்பு : அதிகபட்ச தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து சட்டத்துறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட முதுமாணிப் பட்டம். | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து சட்டத்துறையில் முதுமாணி டிப்ளோமாவொன்று அல்லது இலங்கை சட்டக் கல்லூhயின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முதுமாணி சட்ட டிப்ளோமாவொன்று | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட, | | |
| | • முதலாம் வகுப்புச் சித்தியுடனான சட்டத்துறை இளமானிப் பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல் நிலைச் சித்தியுடனான சட்டத்துறை இளமானிப் பட்டம் | 10 | |
| | • வகுப்பு சித்தியுடனான சட்டத்துறை இளமானிப் பட்டம் | 07 | |
| | • சாதாரண சித்தியுடனான சட்டத்துறை இளமானிப் பட்டம் | 05 | |
| | (ஈ) சட்டக் கல்லூரி இறுதியாண்டில் முதலாம் வகுப்புச் சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டில் இரண்டாம் வகுப்புச் சித்தி (*குறிப்பு* : சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தியுடன் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே மேற்குறித்த 05 புள்ளிகள் வழங்கப்படும்). | 05 | |

<table>
<tr><th>தொடர் இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதி கூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவம் :<br>வழக்குகளுடன் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விடயங்களைத் தெரிவித்தல்
<table>
<tr><th></th><th>வழக்குத் தாக்கல் செய்தல் (ஒரு வழக்குக்கு)</th><th>நீதிமன்றத்தில் ஆஜராகி விடயங்களை முன்வைப்பதற்கான மதிப்பெண்கள் (ஒரு வழக்குக்கு)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>சட்ட நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு : மேற்குறிப்பிட்ட தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு விசாரணை இடம்பெற்ற தினத்தின் வழக்குத் தீர்ப்பின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
<tr><td>03</td><td>தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு<br>குறிப்பு : அதிகபட்ச தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td></td><td>10</td></tr>
<tr><td></td><td>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்; இளமானிப் பட்டம் ஒன்றிற்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தைப் பிரதானமான பாடமாகக் கற்றிருத்தல்.</td><td>10</td><td></td></tr>
<tr><td></td><td>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது ஏனைய அரச அங்கீகாரம் பெற்ற தொழில்முறையிலான நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பச் சட்டத்தில் டிப்ளோமா</td><td>08</td><td></td></tr>
<tr><td></td><td>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையொன்று அல்லது ஏனைய நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா.</td><td>05</td><td></td></tr>
<tr><td></td><td>(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் இருந்து அல்லது ஏனைய அரச அங்கீகாரம் பெற்ற தொழில் நிறுவனமொன்றில் இருந்து தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பச் சட்டப் பிரிவில் கற்கைகள்/ பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்).</td><td>04</td><td></td></tr>
</table>

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதி கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 04 | **மொழித் திறன் :**<br>**குறிப்பு : அதிகபட்ச தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து ஆங்கிலப் பாடத்தினைப் பிரதானமான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டம். | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய ரீதியான மாதிரி நீதிமன்றப் போட்டிகள் (Moot Court Competitions) வரையான ஆங்கில மொழிப் புலைமை<br>தனியாள்<br>I. முதலாம் இடம் / சிறந்த தேர்ச்சி - 12<br>II. இரண்டாம் இடம் - 10<br>III. மூன்றாம் இடம் / ஏனைய தேர்ச்சிகள் - 08<br>குழு<br>I. முதலாம் இடம் / சிறந்த தேர்ச்சி - 10<br>II. இரண்டாம் இடம் - 08<br>III. மூன்றாம் இடம் / ஏனைய தேர்ச்சிகள் - 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து ஆங்கிலப் பாடத்திற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா அல்லது ஏனைய நிறுவனமொன்றில் இருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட SLQF நிலை 3 அல்லது அதற்கு மேல் உள்ள டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது அரசாங்கப் பயிற்சி நிறுவனமொன்றில் இருந்து/ அரசாங்க பயிற்சி நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட நிறுவன மொன்றிலிருந்து குறைந்த பட்சம் 1500 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியைத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிக்கான டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையில் அல்லது Edexel அல்லது Cambridge உயர்தரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்காக உயர் சித்தி பெற்றிருத்தல் அல்லது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியின் 02 ஆண்டுகளுக்குள் IELTS தேர்வில் 6.5 ஒட்டுமொத்தப் புள்ளிகள் (ஒவ்வொரு விடயங்களிலும் 06 புள்ளிகளுடன்) அல்லது அதற்கு மேற்பட்ட, TOEF-IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - PBT 550 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொண்ட உயர் சான்றிதழ் அல்லது ஏனைய நிறுவனமொன்றில் இருந்து அங்கில மொழிக்காகப் பெற்றுக் கொண்ட SLQF 2 நிலை சான்றிதழ். | 05 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதி கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 05 | **நேர்முகத் தேர்வின் போது காட்டப்படும் திறமைகள் :**<br>பதவியின் வகிபாகத்தினை பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்ப தாரரின்:<br>• வலிமை (Strength questions) (02 புள்ளிகள்)<br>• சூழ்நிலை முடிவுகளை எடுக்கும் திறன் (Situational questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>• திறன் (Competency Questions) (10 புள்ளிகள்)<br>மதிப்பீடு செய்யப்படும் வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும். | | 15 |
| | மொத்தம் | | 100 |

07. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் :**

அனைத்து வகையிலும் முறையாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை காண் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரியினாலேயே முறையாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

08. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை 2025.11.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், செயலாளர், பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்கப்பெறும் விதமாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை A 4 அளவிலான தாளில் தயாரித்து முதல் பக்கத்தை 01 தொடக்கம் 05 வரையும் இரண்டாம் பக்கத்தினை 06 தொடக்கம் 08 வரையும் என்றவாறு தயாரித்து தனது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் “சட்ட உத்தியோகத்தர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் கட்டளை யிடும் அதிகாரி அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்த ரொருவர் அல்லது ரூ. 82,150.00 இற்கு அதிகமான மொத்த மாதச் சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் வகிக்கும் அதிகாரியொருவரினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தாம் பணியாற்றும் திணைக்களத்தின் தலைவரினூடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகுதல் தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

09. **தவறான தகவல்களை வழங்குதல் :**

உங்களால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்கள் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படும்.

10. வெற்றிடத்தினை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது இருப்பதற்கான உரிமை பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கே உரியது.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிபெயர்ப்புகளுக்கு இடையில் ஏதேனும் ஒரு முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின் சிங்கள மொழி மூலமே செல்லுபடியாகும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் ஏதேனும் சிக்கல் நிலைமை காணப்படுமாயின் அது தொடர்பாக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி முடிவாக இருக்கும்.

பொதுச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். ஆலோகபண்டார
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2025, செத்தெம்பர் மாதம் 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

**பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./ Mrs. : ……………………………………………………………………
(ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்துக்களில்) ……………………………………………………………………

1.2 முழுப் பெயர் : ……………………………………………………………………
(ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்துக்களில்)……………………………………………………………………

1.3 முழுப் பெயர் :……………………………………………………………………
(சிங்களத்தில்)……………………………………………………………………

02. 2.1 நிரந்தர முகவரி : ……………………………………………………………………

2.2 தொலைபேசி இலக்கம் :

நிலையான :…………… கையடக்க :…………………..

03. 3.1 இனம் : [ ]

(சிங்களம் - 1, தமிழ் - 2 , முஸ்லிம் - 3, ஏனையவை - 4)

3.2 பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

3.3 குடியியல் நிலை :

| | | | |
|---|---|---|---|
| விவாகமானவர் | | விவாகமாகாதவர் | |

3.4 தேசிய அடையாள அட்டை இல. : [ | | | | | | | | | | | ]

3.5 பிறந்த திகதி : [ | | | | | | | ]

3.6 2025 ……........ ஆம் திகதியில் வயது :
வருடங்கள் : …......…….. மாதங்கள்:…………………………… நாட்கள்:……………………

04. 4.1 கல்வித் தகைமை
i. பட்டம் செல்லுபடியாகும் கடிதம் :………………………………………………………………………..
ii. பல்கலைக்கழகம்/நிறுவனம் :……………………………………………………………………
iii. பட்டம் :………………………………………………………………………………………………..

4.2 தொழிற்தகைமை மற்றும் அனுபவம் :
i. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் அல்லது க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் பெற்றுக் கொண்ட சித்தி :…………………….
ii. உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பெற்றுக் கொண்ட அனுபவம் : ………… வருடங்கள்

05. ஏதேனும் குற்றம் ஒன்றிற்காக நீதிமன்றத்தில் முறைப்பாடு காணப்படுகின்றதா ? அவ்வாறெனில் திகதி மற்றும் வழக்கு இலக்கத்துடன் பூரணமான விபரத்தினை தருக.
……………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………

06. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதியளிக்கிறேன். என்னைத் தெரிவு செய்வதற்கு முன்னர் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ கண்டறியப்பட்டால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்கு பொறுத்தமற்றவனாவேன் என்பதையும்;, இந்தப் பதவிக்கு என்னை நியமனம் செய்ததன் பின்னர் அந்தத் தவறு கண்டறியப்பட்டால் எந்தவொரு இழப்பீட்டுத் தொகையினையும் செலுத்தாது என்னை சேவையிலிருந்து நீக்குவதற்கு உட்படுவேன் என்பதை நான் அறிவேன்.

திகதி:………………… விண்ணப்பதாரியின் கையொப்பம் :……………………

07. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினைச் சான்றுபடுத்தல் :

அதிபரொருவர் சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாண ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்த நொத்தாரிஸ் ஒருவர், முப்படைகளின் கட்டளையிடும் அதிகாரியொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் அல்லது ரூ. 82,150.00 இற்கு அதிகமான அடிப்படை மாதச் சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளும் அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிக்கும் அதிகாரியொருவரினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி: ……………………………………………….......... ......................… (முழுப் பெயர்).....……………………………………………………… அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் என்பதாகவும்……………………… ஆம் திகதி எனது முன்னிலையில் அவரின் / அவளின் கையொப்பத்தினை வைத்தார் என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.

…………………………………………………………………….
(கையொப்பத்தினை சான்றுபடுத்தும் அதிகாரியின் கையொப்பம்)

திகதி : ……………………………………….
கையொப்பத்தினை சான்றுபடுத்தும் அதிகாரியின் பெயர் :……………………………………………………
பதவி :……………………….
முகவரி :…………………….
(உத்தியோகபூர்வ இலட்சினையினையூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

08. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் காணப்படுபவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :
இந்தவிண்ணப்பப்படிவத்தினைச்சமர்ப்பிக்கும்திரு./திருமதி/செல்வி……………………………………………………………
...……… (முழுப் பெயர்)......……………………………………………………… அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் என்பதாகவும்……………………… ஆம் திகதி எனது முன்னிலையில் அவரின்/ அவளின் கையொப்பத்தினை வைத்தார் என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.

…………………………………………..
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்)

திகதி : ……………………………………….
பெயர் :……………………………………………………
பதவி :……………………….
(உத்தியோகபூர்வ முத்திரையினையூடாக உறுதிப்படுத்த வேண்டும்)

10-18

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்ப சேவை வகை பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை - 2025

## Open/Limited Competitive Examination for Recruitment to the Posts of Supervisory Management Assistant –Technical Service Category of Ministry of Education, Higher Education and Vocational Education – 2025

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் வெற்றிடமாக உள்ள 01 போக்குவரத்து அதிகாரி, 03 தொழில்நுட்ப அதிகாரி, 03 கட்டிட ஆய்வாளர் மற்றும் 04 வடிவமைப்பு பொறியியலாளர் பதவிகளுக்கும், அமைச்சின் கீழ் உள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள 19 கட்டிட ஆய்வாளர் மற்றும் 20 கேட்பொலி உதவியாளர் பதவிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk இல் “Our Services” இன் கீழ் “Online Applications – Recruitment Exams/ E.B. Exams – ஊடாக வெளியிடப்பட்டிருப்பதுடன், விண்ணப்பங்களை ஆன்லைனில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஆன்லைன் விண்ணப்பங்கள் 2025, ஒற்றோபர் 07 ஆம் திகதி காலை 09.00 மணிக்குத் தொடங்கி 2025, நவம்பர் 04 ஆம் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். பரீட்சை, 2026, சனவரி மாதத்தில் கொழும்பில் நடைபெறும்.

தற்போது அரச/மாகாண சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணபத்தின் பிரதி ஒன்றை தமது சுயவிபரக்கோவையில் உள்ளிடுவதற்காக நிறுவன தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும்போது நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணபத்தின் பிரதி மற்றும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றையும் முன்னிலைப்படுத்த வேண்டும்.

இறுதித் திகதி வரையில் விண்ணப்பப்படிவத்தை அனுப்பாமல் தாமதம் செய்வதால் ஏற்படக்கூடிய இழப்பு களுக்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

01. **சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நிபந்தனைகள் :**

1.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும். (ஓய்வூதிய ஊதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.)

1.2 சம்பளப்படி : இந்தப் பதவிக்கு 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கையின்படி MN 03-2025 ரூ. 52250 – 10 x 800 – 11 x 1190 – 10 x 1320 -10 x 1350 - ரூ. 100,040 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும். தர முறைக்கான தொடக்க சம்பள அளவு ரூ. 52,250.00 ஆகும்.

1.3 இலங்கை தொழில்நுட்ப சேவைகள் பிரமாணக் குறிப்பின்படி மற்றும் 18/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் துணை சுற்றறிக்கைகளின்படி மொழி தேர்ச்சி நிலையினை 05 ஆண்டுகளுக்குள் அடையப்பட வேண்டும்.

1.4 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்களம் சார்ந்த ஏனைய நிபந்தனைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

02. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்** : III ஆம் தரம்

03. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை: இந்த பதவி தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தொகுதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

3.1 **ஆட்சேர்ப்பு வீதம் :**

| *தொகுதி* | *வீதம்* |
|---|---|
| திறந்த | 70% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 30% |

3.2 **வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்கள் :**

3.2.1 **கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு :**

| *இடம்* | *போக்குவரத்து அலுவலர்* | *தொழில்நுட்ப அலுவலர்* | | *கட்டிட ஆய்வாளர்* | | *திட்ட வரைவாளர்* | |
|---|---|---|---|---|---|---|---|
| கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு (இசுருபாய வளாகம்) | திறந்த | திறந்த | மட்டு | திறந்த | மட்டு | திறந்த | மட்டு |
| | 01 | 02 | 01 | 02 | 01 | 03 | 01 |

3.2.2 தேசிய கல்வியியற் கல்லூரி :

| | *தேசிய கல்வியியற் கல்லூரி* | *கட்டிட ஆய்வாளர்* | *கேட்பொலி உதவியாளர்கள்* |
|---|---|---|---|
| 1 | மகரகம தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 2 | சியநே தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 3 | சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி நிட்டம்புவ | 1 | 1 |
| 4 | தம்பதெனிய தேசிய கல்வியியற் கல்லூரி, தம்பதெனிய | 1 | 1 |
| 5 | ஹாபிட்டிகம தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 6 | பஸ்துன்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 7 | தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 8 | ரூஹுணு தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 9 | நில்வலா தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 10 | ருவன்புற தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 11 | ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 12 | மஹாவெலி தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 13 | பேராதனை தேசிய கல்வியியற் கல்லூரி | - | 1 |
| 14 | புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 15 | வடமேல் தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | - |
| 16 | தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியற் கல்லூரி, குளியாப்பிட்டி | - | 1 |
| 17 | ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 18 | மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 19 | அட்டாளச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 20 | வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| 21 | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி | 1 | 1 |
| | மொத்தம் | 19 | 20 |

3.3 திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட பிரிவுகளின் கீழ் அதிகபட்சமாக 03 பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

3.4 கட்டிட ஆய்வாளர் மற்றும் கேட்பொலி உதவியாளர் பதவிகள் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு சேவை நிலையங்களை கோரப்படும் முன்னுரிமை வரிசைப்படி வழங்கப் படுவதுடன், ஒரு விண்ணப்பதாரர் 03 பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

3.5 சேவை நிலையங்களில் பதவியமர்த்தும்போது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறந்த போட்டி பரீட்சையில் அதிக புள்ளிகளை பெறும் தொடர் வரிசையில் கோரப்படும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.6 மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள வீதத்திற்கு போதிய அடிப்படை தகைமைகளைக் கொண்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் அமைச்சில் இல்லையெனில் மாத்திரம் மீதமுள்ளவர்களை திறந்த போட்டி பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## 04. திறந்த ஆட்சேர்ப்பு :

4.1 இலங்கை தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பின்படி இந்த பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர் ஒருவர் 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், அந்த காலத்திற்குள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.2 அரசாங்க மொழி அல்லாத மொழி மூலத்தில் இந்த பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர்களுக்கு மாத்திரம் 03 வருடத்திற்குள் ஒரு அரசகரும மொழியில் தேர்ச்சி பெறவேண்டியதுடன், மற்ற அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியை 05 வருடத்திற்குள் பெறவேண்டும்.

4.3 **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் :**

4.3.1 **கல்வித் தகைமை:**

(அ) கல்வி பொது தராதர பத்திர உயர்தர பரீட்சையில் ஒருங்கிணைந்த கணிதம், பௌதிகவியல், பொறியியல் தொழில் நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் போன்ற பாடங்களில் 02 பாடங்களுடன் விஞ்ஞானம்/கணிதம்/ தொழில்நுட்பவியல் பாடத்தொகுதிக்குரிய மூன்று பாடங்களில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

(ஆ) கல்வி பொது தராதர பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னும் ஒரு பாடத்திற்கு சிறப்பு சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

4.3.2 **தொழில் தகைமைகள் :**

(அ) கட்டிட ஆய்வாளர், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் போக்குவரத்து அலுவலர் பதவிகள் தொடர்பாக மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப் படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

அல்லது

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் 1 ஆம் பகுதியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்

அல்லது

தொழிற்துறைக்கு தொடர்புடைய தேசிய தொழிற்திறமை (NVQ) 06 ஆவது மட்டத்தின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்.

(ஆ) **திட்ட வரைதல் பதவி தொடர்பாக**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் திட்ட வரைதல் தொடர்பாக ஒருவருட முழுநேர பாடத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தொடர்புடைய சான்றி தழை பெற்றிருத்தல்

அல்லது

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப் படும் ஏனைய தொழில்நுட்ப தகைமை களை பெற்றிருத்தல்

(இ) **கேட்பொலி உதவியாளர் தொடர்பாக**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் கேட்பொலி தொழில் நுட்பம் தொடர்பாக ஒருவருட முழுநேர பாடத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தொடர் புடைய சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது

தொழிற்துறைக்கு ஏற்றவாறு தேசிய தொழிற்திறமை (NVQ) 06 ஆவது மட்டத்தின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமாக

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்

4.3.3 **அனுபவம்** : பொருத்தமற்றது

4.3.4 **வயதெல்லை** : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 2025, ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதியில் 18 வயதுக்கும் குறையாத மற்றும் 30 வயதை பூர்த்தி செய்யாதவர்களாக இருத்தல் வேண்டும்.

05. **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :**

5.1 கல்வி அமைச்சிற்குட்பட்ட திணைக்களத்தில் நியமனங்களைக்கொண்டபின்வரும்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

5.1.1 **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்**:

5.1.1.1 **கல்வித் தகைமைகள்:**

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களுக்கு சிறப்பு சித்தியுடன் இரண்டு தடவையில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

5.1.1.2 **தொழிற்தகைமைகள் :**

(அ) கட்டிட ஆய்வாளர், தொழில்நுட்ப அலுவலர் பதவி தொடர்பாக

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

அல்லது

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்

அல்லது

தொழிற்துறைக்குரியவாறு தேசிய தொழில் திறனில் (NVQ) 06 ஆவது மட்டத்தை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்

(ஆ) திட்ட வரைவாளர் பதவி தொடர்பாக

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் திட்ட வரைவு தொடர்பாக ஒருவருட முழுநேர பாடத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தொடர்புடைய சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்

(இ) கேட்பொலி உதவியாளர் தொடர்பாக

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் கேட்பொலி தொழில்நுட்பம் தொடர்பாக ஒரு வருட முழுநேர பாடத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தொடர்புடைய சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது

தொழிற்துறைக்கு ஏற்றவாறு தேசிய தொழிற்திறமை (NVQ) 06 ஆவது மட்டத்தின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்ப தகைமைகளுக்கு சகல வழிகளிலும் சமமாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில் நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்

5.1.2 **அனுபவம்:** ஆரம்ப அல்லது அதற்கு மேலான சேவை வகையில் நிரந்தர, திணைக்களம் சார்ந்த பதவியொன்றில் தொடர்புடைய துறையில் குறைந்த பட்சம் 05 வருட தொடர்ச்சியான மற்றும் மகிழ்ச்சிகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்

5.1.3 **வயதெல்லை** : பொருத்தமற்றது

5.2 **ஏனைய தகைமைகள்:**

i. பதவி நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும்

ii. பொது நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் இருத்தல்

iii. உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரப்படும் போது அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய் திருந்தால் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப் படும்.

06. **உடற்தகைமை :**

6.1 இலங்கையில் எந்த ஒரு பகுதியிலும் பணி யாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறை வேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

6.2 இந்த பரீட்சைக்கு விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பதாரர்கள் தோற்றுவதாயின் அது குறித்து விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடவேண்டியதுடன, தொடர்புடைய மருத்துவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தின் அசல் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள்:**

7.1 விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

7.2 விண்ணப்பதாரர் சிறந்த நற்பண்புடையவராக இருக்க வேண்டும்;

7.3 ஏதேனும் ஒரு மதப்பிரிவை சேர்ந்த துறவியாக இருக்கும் எவரும் இந்த பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியற்றவர் ஆவார்;

7.4 பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினத்தன்று பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:** எழுத்துமூல பரீட்சை யில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறன் தொடர் வரிசைகளின்படி பொது நேர்முகத்தேர்வொன்று நடத்தப்பட்டு அடிப்படை தகைமைகளை பரிசீலித்த பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

8.1 எழுத்துமூல பரீட்சை: இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற எழுத்துமூல பரீட்சையொன்றின் மூலமாக மதிப்பெண்கள் வழங்கப்படும்

8.2 **எழுத்துமூல பரீட்சை தொடர்பான விபரங்கள்:**

| *பாடப் பகுதிகள்* | *நேரம்* | *மொத்த புள்ளிகள்* | *சித்திபெற்ற புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 விடயம் சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | 02 மணித்தியாலம | 100 | 40% |

8.3 **பரீட்சைக்கான முக்கிய பாடவிதானங்கள் :**

| *பாடப் பகுதிகள்* | | *பாடவிதானங்கள்* |
|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | • விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான சிந்தனை, பகுப்பாய்வு திறன், நேர முகாமைத்துவம், தீர்ப்பை சோதிக்கும் கேள்விகளை கொண்டதாகும்.<br>• ஆட்சேர்ப்பின்போது பரிசீலிக்கப்படும் கல்வித் தகைமை களைப் பொறுத்து மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை மற்றும் திறந்த பரீட்சைக்கு தனித்தனியான நுண்ணறிவு பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன |
| 02 | விடயம் சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | • பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவை எடைபோடும் வினாக்களுடன் கூடிய இரண்டு பகுதிகளைக்கொண்ட வினாத்தாளாகும்.<br>• பின்வரும் பதவிகள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட பணிகளுக்குரியவாறு பாடம் சார்ந்த தொழில்நுட்ப அறிவு சோதிக்கப்படுகின்றது |

8.4 பதவிக்குரிய விடயம் சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை பாடவிதானம்

| *பதவி* | *பாடவிதானம்* |
|---|---|
| தொழில்நுட்ப அலுவலர் | 1. வேலத்தளங்களின் மேற்பார்வை, அறிக்கைகளை வரைவுசெய்தல் மற்றும் ஒழுங்குமுறை<br>2. மதிப்பீட்டிற்குத் தேவையான துறைசார்ந்த தரவுகளை பெற்றுக்கொள்ளல்<br>3. துறைசார் தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் விலைகளின் பகுப்பாய்வு<br>4. பெறுகை நடவடிக்கைகள்<br>5. துறைசார்ந்த பரிசோதனை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிக்கைகளை தயாரித்தல்<br><br>மேற்படி பணிகளுக்குரிய NVQ 6 மட்டத்திலான அறிவு மற்றும் பணிகளுக்குரிய பாடம்சார்ந்த தொழிநுட்ப அறிவு பரிசோதிக்கப்படும். |
| திட்ட வரைவாளர் | 1. பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின் தேவைகள்/வடிவமைப்புகளுக்கு ஏற்ப திட்டங்களைத் தயாரித்தல்<br>2. மதிப்பீடுகள் மற்றும் கட்டண பற்றுச்சீட்டுகளின் கணித துல்லியத்தை சரிபார்த்தல்<br>3. கட்டுமான முன்னேற்றத்தை நிர்வகிப்பதில் உதவுதல்.<br><br>மேற்கண்ட பணிகளுடன் தொடர்புடைய பாடம்சார்ந்த தொழில்நுட்ப அறிவு சோதிக்கப்படும். |
| கட்டிட ஆய்வாளர் | 1. கள ஆய்வுகளை நடத்துதல் மற்றும் அவதானிப்புகள்/பரிந்துரைகள் மற்றும் கள அளவீடு மற்றும் தள மேற்பார்வை ஆகியவற்றைப் அறிக்கையிடுதல்;<br>2. பெறுகை வழிகாட்டுதல்களின்படி பெறுகை செயல்முறையை சீராக நடத்துவதற்குத் தேவையான துணை சேவைகளை வழங்குதல்<br>3. கட்டுமானத்திற்கான கட்டண பற்றுச்சீட்டுக்களை சரிபார்த்தல் மற்றும் பரிந்துரைத்தல்<br>4. ஏல ஆவணங்களை வரைதல்<br>5. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலை மதிப்பீட்டுக் குழுக்களின் செயல்பாடுகளைச் நிறைவேற்றுதல்<br>6. கனிஷ்ட அலுவலர்களை மேற்பார்வையிடுதல் மற்றும் வழிநடத்தல்;<br>7. செலவு மதிப்பீடுகளை சரிபார்த்தல் மற்றும் பரிந்துரைத்தல்.<br><br>மேற்படி பணிகளுடன் தொடர்புடைய NVQ நிலை 6 அறிவு மற்றும் செயல்பாடுகளுக்குரிய பாடம் சார்ந்த தொழில்நுட்ப அறிவு சோதிக்கப்படும் |

| *பதவி* | *பாடவிதானம்* |
|---|---|
| போக்குவரத்து அலுவலர் | 1. அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வாகனங்களையும் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்கள் குறித்து பரிந்துரைகளை வழங்குதல்<br>2. வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக சமர்ப்பிக்கும்போது வாகனத்தில் உள்ள குறைபாடுகள் குறித்து தெளிவான முடிவை எடுத்தல்<br>3. வாகன பழுதுபார்ப்பு தொடர்பாக கேரேஜால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளை சரிபார்த்தல் மற்றும் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய பழுது, உதிரிபாகங்களை பொருத்துதல் மதிப்பீட்டில் உள்ள விலைகள் நியாயமானவையா என்பது குறித்து திருப்தியடைந்த பின்னர் அவற்றை பரிந்துரைத்தல்<br>4. வாகன பழுதுபார்த்தலின் பின்னர் அந்த பழுதுபார்த்தல்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை பரசீலித்து கட்டணங்களை செலுத்துவதற்கு முன் பரிந்துரைத்தல்<br>5. ஓட்டுநர்கள் வாகனத்தை முறையாக பராமரித்து வருகிறார்களா என்பதை மாதந்தோறும் பரிசீலித்தல் மற்றும் இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு பொருத்தமான பரிந்துரைகளை சமர்ப்பித்தல்<br>6. வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை பரிசீலித்தல்;<br>7. வாகனங்கள் விபத்துகளுக்கு ஆளாகும்போது விசாரணைகளை மேற்கொண்டு, இழப்புக்கான பொறுப்பைக் கணக்கிடுதல்<br>8. நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் வாகனங்களை சர்வீஸ் செய்வதற்கு வழங்குதல்<br>9. வாகன பழுதுபார்ப்புக்காக உதிரிப் பாகங்களைப் பயன்படுத்துதல், பழைய பாகங்களை முறையாக ஏற்றுக்கொண்டு கிடங்கிற்கு அனுப்புதல்<br>10. வாகனத்தை ஓட்டும்போது ஏற்படும் விபத்துகள் போன்றவற்றில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைக் கையாளுதல், அவை தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் கோவைகளையும் பராமரித்தல்<br>11. வாகனங்களை காப்பீடு செய்தல் மற்றும் விபத்துகளில் இழப்புகள் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்<br><br>மேற்கண்ட பணிகள் தொடர்பான NVQ நிலை 6 பற்றிய அறிவு மற்றும் மேற்கூறிய பணிகள் தொடர்பான பாடம் சார்ந்த தொழில்நுட்ப அறிவு சோதிக்கப்படும். |
| கேட்பொலி உதவியாளர்கள் | 1. கேட்பொலி உபகரணங்களை இயக்குதல் மற்றும் அத்தகைய உபகரணங்களின் செயல்பாட்டிற்கு பொறுப்பாக இருத்தல்<br>2. ஒழுங்கமைக்கப்பட்ட கேட்பொலி அலகை பராமரித்தல் மற்றும் அனைத்து கேட்பொலி உபகரணங்களுக்கும் பொறுப்பாக இருத்தல்<br>3. கடமை தொடர்பான கேட்பொலி உபகரணங்களைப் பெற நடவடிக்கை எடுத்தல் மற்றும் அலகு தொடர்பான கேட்பொலி உபகரணங்களுக்கான துணை சரக்கு புத்தகம் ஒன்றை பராமரித்தல்<br>4. உபகரணங்கள், உள்ளக மற்றும் வெளிப்புற கற்பித்தல் தேவைகளுக்கும் முறையாக அனைத்து சாத்தியமான வாய்ப்புகளையும் வழங்குதல்.<br><br>மேற்கண்ட பணிகள் தொடர்பான NVQ நிலை 6 பற்றிய அறிவு மற்றும் மேற்கூறிய பணிகள் தொடர்பான பாடம் சார்ந்த தொழில்நுட்ப அறிவு சோதிக்கப்படும். |

09. **திறனறி மதிப்பீட்டு நேர்முகத் தேர்வு** : பொருத்தமற்றது.

10. **சாதாரண நேர்காணல்:**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வு குழுவினால் விண்ணப்பதாரர்களின் தகுதிகளை மட்டுமே ஆராய்வதுடன், எந்த மதிப்பெண்களும் வழங்கப்படமாட்டாது.

11. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கொழும்பில் மட்டுமே நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு விருப்பமான மொழிகளில் ஒன்றில் பரீட்சைக்கு தோற்றலாம். விண்ணப்பதாரர்கள் இந்தத் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் பதிலளிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.

12. இணையவழி பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழியில் சமர்ப்பித்த மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை இலங்கை பரீட்சைத் திணைக்கள, கணினியை அணுகப் பயன்படுத்தப்படும் மொபைல் தொலைபேசி எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (email) முகவரி மூலம் தெரிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான பொதுவான வழிமுறைகளைப் (Common Instructions) பதிவிறக்கம் செய்துக்கொள்ளவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது இந்த வழிமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும். முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

13. **பரீட்சை கட்டணம்:**

பரீட்சை கட்டணம் ரூ. 600.00. ஆகும். பரீட்சைக் கட்டணத்தை இணையவழி அமைப்பால் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

(i) ஏதேனும் வங்கி கடன் அட்டைமூலமாக (Any Bank Credit Card)
(ii) ஏதேனும் வங்கி பற்று அட்டைகள் மூலம் (Any Bank Debit Cards)
(iii) இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை (Bank of Ceylon Online Banking Method)
(iv) ஏதேனும் இலங்கை வங்கி டெல்லர் சீட்டு கட்டணம் (Bank of Ceylon Teller Slip Payment)

**கவனிக்கவும்:** மேற்கண்ட முறைகள் மூலம் பணம் செலுத்துவது தொடர்பான குறித்த வழிமுறைகள் பரீட்சைக்கான தொழில்நுட்ப வழிமுறைகளின் கீழ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

கட்டணம் பெறப்பட்டதாக SMS அல்லது மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், குறை வாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் ஏற்படும் பிழைகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது. எந்தக் காரணத்திற்காகவும் தேர்வுக்கு செலுத்தப்பட்ட தொகை மீளச்செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

14. பரீட்சாத்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தேர்வாளர்கள் தங்கள் அடையாளத்தை கண்காணிப்பாளரின் திருப்திக்கு ஏற்ப நிரூபிக்க வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி பத்திரம்.

மேலும், பரீட்சாத்திகள்; தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தப்படும் விதத்தில் மற்றும் எந்த மின்னணு தொடர்பு சாதனங்களையும் அணியாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக தங்கள் முகத்தையும் காது களையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். தங்கள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை அவர்கள் தங்கள் முகத்தையும் காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

15. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அடிப்படையில், விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ இணையவழி மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, பரிந்துரைக்கப் பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சை மண்டப அனுமதிச் சீட்டுகளை இணையவழி மூலம் வழங்கி வைக்கப்படும். பரீட்சை மண்டப அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இணைய அறிவிப்பு/குறுஞ்செய்தி மூலம் பரீட்சாத்திகளுக்கு இது குறித்து தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு விண்ணப்பதாரர் தனது அனுமதி

அட்டையைப் பெறவில்லை என்றால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் அமைப்புக் கிளையில் அது குறித்து விசாரிக்க வேண்டும். அத்தகைய விசாரணையை மேற்கொள்ளும்போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், பரீட்சாத்தியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராக இருந்தால், விண்ணப்பதாரரின் தொலைநகல் எண்ணைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றினை, மேற்படி விபரங்களுடன் சேர்த்து, விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் எண்ணுக்கு அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும், இதனால் தேர்வு அனுமதி அட்டையின் நகலை உடனடியாகப் பெறலாம். அத்தகைய விசாரணையை மேற்கொள்ளும்போது, தேர்வுத் துறையால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் சரிபார்க்க, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட நகலை தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டை சரிபார்க்கப்பட்டு, ஏதேனும் திருத்தங்கள் தேவைப்பட்டால், இலங்கைப் பரீட்சைத் துறையை சரியான நேரத்தில் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின்படி தொடர்புடைய திருத்தங்களைச் செய்ய வேண்டும். தேர்வு மண்டபம்/நேர்காணலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

16. ஒரு விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சை அல்லது பதவிக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்ததற்கான ஒப்புதலாகக் கருதப்பட மாட்டாது.

17. விண்ணப்பதாரரால் முறையாக சான்றளிக்கப்பட்ட அனுமதி அட்டை, பரீட்சைக்கு தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

18. விண்ணப்பங்களைக் கோரும் அறிவிப்பு அல்லது அந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத வேறு எந்த விஷயத்திலும் முடிவெடுக்கும் உரிமையைப் பெறுபவர் உரிய அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரே ஆவார்.

19. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பின் மொழிப் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்கள மொழி அறிவிப்பு மேலோங்கும்.

நாலக்க கலுவெவ,
செயலாளர்.

கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
2025,செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி.

10-08

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டமைச்சின் கீழான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உதவிச்சிறைச்சாலை அத்தியட்சகர் (ஒழுக்கம்) பதவியில் காணப்படுகின்ற 10 வெற்றிடங்களை திறந்த அடிப்படையில் நிரப்புவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி பின்வரும் தகைமைவாய்ந்த இலங்கை ஆண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் வலைத்தளத்தில் "Our Services" என்பதன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/E.B.Exams"/E.B. Exams ஊடாக வெளியிடப் பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை நிகழ்நிலை முறையூடாக (Online) மாத்திரமே சமர்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படலானது 2025, ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து 2025, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும். பரீட்சையினை 2026, சனவரி மாதம் கொழும்பில் நடாத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தமது தனியார் கோப்புக்கு சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவர்களுக்கு ஒப்படைக்க வேண்டியதுடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற போது நிறுவனத் தலை வரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி யொன்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றும் சமர்பித்தல் வேண்டும்.

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பமானது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். முன்வைக்கப்பட்ட விண்ணப்பமானது செல்லுபடியான விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என்று முறையியலுக்கு நுழைய உபயோகப் படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவ லொன்று (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப் பத்தினை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்ள வும். விண்ணப்பத்தினை நிரப்புகின்ற போது அவ் அறிவித்தல்களை கண்டிப்பாக பின்பற்றவும். பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்களானது அறிவித்தலின்றி நிராகரிக்கப் படும்.

இறுதித் திகதி வரை விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளும் விண்ணப்பதாரரால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை:**

(i) உரிய தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் ஒருங்கிணைந்த புள்ளிகளின் திறமை வரிசையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுள், வெற்றிடங்களின் மூன்று மடங்கினருக்கு குறையாத எண்ணிக்கையளவிலான விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படலானது இல. (8) பந்தியில் காட்டப் பட்டுள்ள புள்ளி வழங்கும் நடைமுறையினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(iii) நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், நியமனம் செயற்படுத்தப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்கு உரித்தான ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர்கள் மூன்று (03) வருட காலத்திற்கு தகுதிகாண்; நிலைக்கு உட்படுவதுடன், அம்மூன்று (03) வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

(iii) தேரந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள எந்தவொரு சிறைச் சாலைகள் நிறுவனம் ஒன்றில் சேவையாற்ற வேண்டியுள்ளதுடன், இணைப்பு செய்யப்படும் சிறைச்சாலைகள் நிறுவனத்தில் உத்தியோகபூர்வ இல்ல வசதிகள் இருப்பின், கட்டாயமாக உத்தி யோபூர்வ இல்லத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.

(iv) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய குறித்த ஏனைய அரசகரும மொழியில்/ அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(v) இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கநிதி ஒழுங்குமுறைகளுக்கும், சிறைச்சாலை திணைக்களத்தின் உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடை முறைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனை களுக்கும் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்:**

இப்பதவிக்குரிய (மாத) சம்பள அளவுத்திட்டம் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 10/2025 சம்பள சுற்றறிக்கையின் படி SL-1-2025, ரூபா 82150-10X2,400-8X12,940-17X3,900- ரூபா 195,970.00 உரித்தானதாகும்.

4. **தகைமைகள்:**

(அ) **கல்வித் தகைமைகள் :**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் அல்லது பட்டம் அளிக்கின்ற நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற ஆரம்ப பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்

- க.பொ.த.(சா./தர.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) **உடற்தகைமைகள்:**

i. குறைந்தபட்சம் உயரம் 5 அடி 6 அங்குலத்தைக் கொண்டிருத்தல்.
ii. மார்பு மூச்சுவிட்ட நிலையில் 32 அங்குலத்தைக் கொண்டிருக்க வேண்டும்
iii. சிறந்த உடல் ஆரோக்கியத்தினைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(இ) **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை தொடர்புடையதன்று)

(ஈ) **பௌதீக தகைமைகள் :**

(I) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை யாற்றுவதற்கும், பதவிக் கடமைகளை

நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(II) உடல் மற்றும் உளத் தகைமைச் சோதனை ஒன்று நடாத்தப்படுவதுடன் இத்தேர்வில் ஈடுகொடுக்கும் திறன், உடல் மற்றும் உளத் தகுதி, கட்புலன், செவிப்புலன் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும். இயற்கையானதும் செயற்கையானதுமான உடல் ரீதியான மாற்றங்கள் (பச்சை குத்துதல் போன்றன) இருக்கக் கூடாது.

5. **வேறு தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) உயரிய மற்றும் சிறந்த குணநலன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவை பொலிஸினது இசைவுச் சான்றிதழறிக்கை மூலம் உறுதிப் படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) ஒழுக்கக்கேடான நடத்தை குற்றத்திற்கு எந்தவொரு நீதிமன்றத்தாலும் தவறாளியாக்கப்பட்டவர் எனின் மேற்படி பதவிக்குரிய நியமனத்திற்கான முழுமையான தகைமை அற்றவராவர்.

(iv) அரசாங்க அலுவலரான விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுக்காற்றுத் தண்டனை பெறாதிருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதி தினத்தில் அதாவது 2025, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதியில் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு அவசியமான சகல தகைமைகளையும் அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(vi) மதகுருவாக இருக்கின்ற ஒருவருக்கு விண்ணப்பிக்க அல்லது தோற்ற முடியாது.

6. பின்வரும் ஆவணங்களில் சிலவற்றை அல்லது சகல ஆவணங்களையும் சமர்பிக்குமாறு கேட்கப்படு கின்ற போது அவற்றின் மூலப்பிரதிகள் விண்ணப்ப தாரிகளால் சமர்பிக்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சையில் ஆவணங்களை சமர்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கவனிக்குக: இடை நிலை கல்விக்கான நடத்தை விதிகளில் நோக்கங் களுக்காக வழங்கப்படும் ஞானஸ்நானப் பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்கப்படமாட்டது.)
(ஆ) பெற்றுக்கொண்டுள்ள கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள்
(இ) குணநலச்சான்றிதழ்கள் இரண்டு (02)
(ஈ) தொழில்சார் மற்றும் /அல்லது துறைசார் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.
(உ) ஆங்கிலப் பாடத்தில் சித்திபெற்ற அதி உயர் பரீட்சை பற்றிய சான்றிதழ்
(ஊ) விண்ணப்பதாரிகளின் ஆளடையாளத்தை உறுதிப் படுத்தக் கூடிய அடையாளப்படுத்தும் சான்றித ழொன்று.

7. **பரீட்சை நடைமுறைகள் :**

7.1 **எழுத்துப் பரீட்சை :**

7.1.1 இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

7.1.2 பரீட்சை தொடர்பான தகவல்கள்:

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரண்டு (02) வினாப்பத்திரங்கள் கொண்ட எழுத்துப்பரீட்சை நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடங்களிலும் சித்திபெற வேண்டிய குறைந்த புள்ளியளவானது பின்வரும் வகையில் அமையும். பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

| *இல.* | *பாடங்கள்* | *காலம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தி புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுச் சோதனை மற்றும் பொது அறிவு<br>பகுதி I - நுண்ணறிவுச் சோதனை | 45 நிமிடங்கள் | 50 | 40% |
| | பொது அறிவு (சர்வதேச மற்றும் தேசிய பொது அறிவு பரிசோதிக்கப்படும்)<br>பகுதி II - நுண்ணறிவுச் சோதனை (சர்வதேச மற்றும் உள்நாட்டு அறிவு பரிசோதிக்கப்படும்.) | 45 நிமிடங்கள் | 50 | 40% |

| *இல.* | *பாடங்கள்* | *காலம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தி புள்ளி* |
|---|---|---|---|---|
| 02 | விடய ஆய்வு(முகாமைத்துவ அறிவு பற்றிய) | 2 மணித்தியாலம் | 100 | 40% |

7.1.3 பரீட்சை தொடர்பான பாடங்களுக்களுக்கான பரிந்துரை :

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப் பரிந்துரை* |
|---|---|
| 1. நுண்ணறிவுச் சோதனை மற்றும் பொது அறிவு<br>பகுதி I - நுண்ணறிவுச் சோதனை | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான சிந்தனை தன்மைகளும், அவர்களது சிந்தனையின் பகுப்பாய்வு நிலைமைகளும், தீர்மானம் எடுப்பதன் வலிமையையும் தீர்மானிப்பதற்கான நுண்ணறிவுச் சோதனை வினாக்கள் உள்ளடக்கிய பல்தேர்வு வினாப்பத்திரமாகும். |
| 2. நுண்ணறிவுச் சோதனை மற்றும் பொது அறிவு<br>பகுதி II - நுண்ணறிவுச் சோதனை<br>(சர்வதேச மற்றும் உள்நாட்டு அறிவு பரிசோதிக்கப்படும்.) | தகவல் தொழிநுட்பம், விண்ணப்பதாரிகள் வசிக்கின்ற சூழல் உள்ளிட்ட இலங்கையின் அரசியல் தன்மை, சமூகமய, கலாசார மற்றும் பொருளாதார சூழலையும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்ற நவீன விடயங்கள் போன்றே விஞ்ஞான மற்றும் தொழில்துறை அபிவிருத்தி தொடர்பான அறிவினையும் பரிசோதிப்பதற்கான பொது அறிவு வினாக்களையும் உள்ளடக்கிய இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்களை கொண்டிருக்கும். |
| 3 விடய ஆய்வு (முகாமைத்துவ அறிவு பற்றிய) | பணியாளர் முகாமைத்துவம், நிறுவன முகாமைத்துவம், நலன்புரி நடவடிக்கைகள், விவசாய நடவடிக்கைகள், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் சிறிய கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகள் பற்றிய விடய ஆய்வானது 04 வினாக்களைக் கொண்டதாகும். |

7.1.4. **பெறுபேறு வெளியிடல்:**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவித்து அனுப்பப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் வலைத்தளத்தில் வெளியிடப்படும்.

8. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை:**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் பின்வரும் புள்ளி வழங்கும் நடைமுறைக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதில் உயர்ந்தபட்சமாக 100 புள்ளிகள் அளிக்கப்படும்.

| *தொடர் இல.* | *நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 20 |
| | I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அளிக்கப்படுகின்ற முதுகலைப் பட்டத்திற்காக | 20 | |
| | II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற வேறு நிறுவனத்தினால் அளிக்கப்படுகின்ற முதுகலை டிப்ளோமா பாடநெறி அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைக்காக | 15 | |
| | III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற வேறு நிறுவனத்தினால் அளிக்கப்படுகின்ற ஒருவருட அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா பாடநெறிக்காக | 10 | |

| *தொடர் இல.* | *நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | IV. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற வேறு நிறுவனத்தினால் அளிக்கப்படுகின்ற டிப்ளோமா/ சான்றிதழ் பாடநெறிக்காக | 06 | |
| | V. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் அளிக்கப்பட்ட | | |
| | விசேட பட்டத்திற்காக | 12 | |
| | முதலாம் வகுப்புச் சித்தியுடனான சாதாரண பட்டமொன்றிற்காக | 10 | |
| | இரண்டாம் வகுப்பில் உயர் சாதாரண சித்தியுடனான பட்டமொன்றிற்காக | 08 | |
| | இரண்டாம் வகுப்பில் கீழ் சித்தியுடனான சாதாரண பட்டமொன்றிக்காக (அதி உயர் தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்) | 06 | |
| 02 | **மொழித் தேர்ச்சி :** | | 10 |
| | A) **ஆங்கில மொழி :** | | |
| | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா ஒன்று அல்லது வேறு நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட SLQF 3 அல்லது அதற்கு மேல் மட்ட டிப்ளோமா அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றினால்/ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது 1500 மணித்தியால கற்றல் பாடநெறியொன்றினை மேற்கொண்டு பெறப்பட்ட டிப்ளோமா. | 05 | |
| | (ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் 06 மாத அல்லது 720 மணித்தியாலத்திற்குக் குறையாத டிப்ளோமாவொன்றுக்காக | 04 | |
| | (iii) கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இங்கிலாந்து) ஆங்கிலமொழிக்கு குறைந்த பட்சம் அதி திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழிக்கு IELTS மொத்தப்புள்ளி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL – IBT 79 அல்லது அதற்கு மேல் TOEFL-CBT213 அல்லது அதற்கு மேல் TOEFL – PBT 550 அல்லது அதற்கு மேற்படல் | 04 | |
| | (iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட உயர் சான்றிதழ் பத்திரம் அல்லது வேறு நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட SLQF -2 மட்ட சான்றிதழொன்று | 02 | |
| | (v) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப் பட்ட வேறு சான்றிதழொன்றுக்காக | 01 | |
| | B) **ஏனைய அரசகரும மொழிகள் (சிங்களம்/தமிழ்)** | | |
| | (I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்க நிறுவனமொன்றினால் வழங்கப்படும் 06 மாத அல்லது 720 மணித்தியாலங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக | 05 | |
| | (II) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் 03 மாத அல்லது 360 மணித்தியாலங்களுக்குக் குறையாத சான்றிதழ்களுக்காக | 04 | |
| | (III) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இங்கிலாந்து) முதலாம் மொழியாக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு பின்வரும் வகையில் சித்தி பெற்றிருத்தல். (02 மொழிகளுக்கும் பெற்றுக்கொண்டுள்ள சித்திகளில் குறைந்த சித்திக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.) | | |
| | விசேட திறமைச் சித்தி | 05 | |
| | அதி திறமைச் சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |

| *தொடர் இல.* | *நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (IV) கல்விப் பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இங்கிலாந்து) அல்லது தமிழ் மொழிக்காக பின்வரும் சித்தியைப் பெற்றிருத்தல் (முதலாம் மொழியாக சித்தி பெற்றுள்ள மொழியல்லாத இரண்டாம் மொழிக்கு மட்டும்) | | |
| | விசேட திறமைச்சித்தி | 03 | |
| | அதி திறமைச் சித்தி/ திறமைச்சித்தி | 02 | |
| | சாதாரண சித்தி | 01 | |
| | (மொழித் தேர்ச்சியின் கீழ் (A) மற்றும் (B) இற்கு உயர் தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 03 | **தகவல் தொழிநுட்பம் தொடர்பான அறிவு :** | | 10 |
| | (I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட உயர் தகைமை | 10 | |
| | (II) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட உயர் தகைமை | 06 | |
| | (III) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்சார் நிறுவனமொன்றினால் மற்றும் தொடர்பாடல் துறையில் தகவல் பாடநெறிகளை மேற்கொண்டு/ பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்) | 04 | |
| | (அதி உயர் தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 04 | **விளையாட்டுத் திறன்கள் :** | | 20 |
| | I. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளின் போது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தல் | 10 | |
| | II. அகில இலங்கை மட்ட சாதனைகள் | 08 | |
| | III. மாகாண மட்ட சாதனைகள் | 05 | |
| | IV. மாவட்ட மட்ட சாதனைகள் | 03 | |
| | V. பிரதேச மட்ட சாதனைகள் | 02 | |
| | VI. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சாதனைகள் | 02 | |
| | VII. பாடசாலை மட்ட சாதனைகள் | 02 | |
| | (ஒரு விளையாட்டில் அதிகபட்ச சாதனைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |

| *தொடர் இல.* | *நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 05 | **தலைமைத்துவம் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகள் :** | | 20 |
| | மாணவசிப்பாய்கள் குழுவின் தலைவர் அல்லது அதற்கு மேற்பட்ட உயரிய பதவியினை வகித்தல் | 06 | |
| | சனாதிபதி சாரணர் ஒருவராக இருத்தல் | 06 | |
| | பாடசாலை பிரதான மாணவ தலைவர் | 06 | |
| | பேண்ட் வாத்திய இசைக்குழு தலைவர் | 06 | |
| | மாணவச்சிப்பாய் குழுவின் உறுப்பினராக இருத்தல் | 03 | |
| | சாரணர் குழுவின் உறுப்பினராக இருத்தல் | 03 | |
| | மாணவத் தலைவராக இருத்தல் | 03 | |
| | பேண்ட் வாத்தியகுழுவின் உறுப்பினராக இருத்தல் | 03 | |
| | பிரதான விளையாட்டுத் தலைவர் | 03 | |
| | அறநெறிப் பாடசாலை மாணவத் தலைவர் | 03 | |
| | சுகாதார/ சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் சேவை/ செஞ்சிலுவை | 03 | |
| | முதலுதவி உறுப்பினரொருவராக இருத்தல் | 03 | |
| | இளைஞர் படையணி உறுப்பினரொருவராக இருத்தல் | 03 | |
| | அறநெறிப்பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்திபெறல் | 03 | |
| | நேர்முகப் பரீட்சை சபையினால் கவனத்தில் கொள்ளப்படும் வேறு விசேட தகைமைகள் (நேர்முகப் பரீட்சை சபையினால் இது தொடர்பில் குறிப்பு வைக்கப்படல் வேண்டும்) | | |
| 06 | **விசேட திறன்களும் ஆற்றல்களும் :** | | 10 |
| | (தொடர் இலக்கம் 04 மற்றும் 05 இன் கீழ் எடுக்கப்படாத வேறு திறன்கள் மற்றும் ஆற்றல்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படும்.) | | |
| | அகில இலங்கை ரீதியிலான சாதனைகள் | 06 | |
| | மாகாண மாட்டத்திலான சாதனைகள் | 05 | |
| | மாவட்ட மட்டத்திலான சாதனைகள் | 04 | |
| | வேறு சாதனைகள் | 03 | |
| | (ஒரு நிகழ்வில் அதிகபட்ச சாதனைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 07 | **நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறன்கள் :** | | 10 |
| | I. தலைமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் | 05 | |
| | II. தர்க்கரீதியான சிந்தனை | 02 | |
| | III. தொழில்சார் நெறிமுறைகள் தொடர்பான அணுகுமுறைகள் | 03 | |
| | மொத்தப் புள்ளிகள் | | 100 |

**குறிப்பு:** எந்தவொரு தகுதிக்கும் ஒரு தலைப்பின் கீழ் மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். தகுதியை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுடன் அதன் கால அளவு/SLQF மட்டம்/NVQ நிலையினை உறுதிப்படுத்துவதற்கான உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் பதில் அளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு சொந்த விண்ணபப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஊடாக மொழியை மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

II. பரீட்சைக் கட்டணம் 1,200.00 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணத்தினை நிகழ்நிலை அமைப்பூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் பணம் செலுத்தல் முறை ஊடாக மட்டும் பணம் செலுத்துதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை ஊடாகவும் (Any Bank Credit Card)

ii. இணைய பணக்கட்டணம் செலுத்தும் வசதி கொண்ட வங்கி வரவு அட்டை ஊடாக (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கிமுறை (Online Banking Method of Bank of Ceylon)

iv. இலங்கை வங்கியின் ஏதேனுமொரு கிளை ஊடாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்படி முறைகள் ஊடாக கட்டணங்கள் செலுத்துதல் தொடர்பான விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் வலைத்தளத்தில் பரீட்சை குறித்த தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைத்ததாக குறுந்தகவல் (SMS) ஒன்றினூடாக அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சைக் கட்டணத்தினை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட கட்டணம் செலுத்தும் முறையூடாக பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் ஏற்படும் குறைபாடு தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்பட்ட தொகை எவ்வித காரணத்திற்காகவும் மீள செலுத்தப்படவோ அல்லது வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ முடியாது.

III. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறு களை வெளியிடல் தொடர்பாக பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிய பரீட்சார்த்திக்கு ஏற்படும்.

குறிப்பு: பரீட்சை அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மண்டப அதிகாரிக்கு சமர்பிக்க வேண்டியதானது தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட பரீட்சை அனுமதி அட்டை மட்டுமே ஆகும்.

IV. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டவர்கள் மட்டும் விண்ணப் பித்துள்ளார்கள் எனும் கருத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டிய நிமித்தம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களினை அனுப் பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைநிகழ்நிலையூடாகமட்டும்வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டை வெளியிடப்பட்ட உடனே இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றி வலைத்தள அறிவித்தலினூடாக/ விண்ணப்பதாரிகளுக்கு குறுந்தகவல் மூலமாக அறிவிக்கப்படும். தமது பரீட்சை அனுமதி அட்டையைப் பெறாத பரீட்சார்த்தியாயின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையில் வினவ வேண்டும். அவ்வாறு வினவுகின்ற போது விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவிக்கொள்ளல் மிக்க பயனுள்ளதாகும். அவ்வாறு வினவுகையில் பரீட்சைகள்திணைக்களத்தினால்கேட்கப்படுகின்ற ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினை¸ அருகில் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும். அனுமதி அட்டையை பரீட்சித்துப் பார்த்து ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டி இருந்தால் நேரகாலத்துடன் பரீட்சைத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தின்படி பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/ நேர்முகப் பரீட்சையின் போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கான கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

V. பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். அரசாங்க சேவை ஆணைக் குழுவின் அனுமதியின் படி பரீட்சையினை பிற்படுத்தலுக்கு அல்லது இரத்துச் செய்தலுக்கான அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கே உண்டு.

VI. பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.

VII. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டப அதிகாரி திருப்தி அடைகின்ற வகையில் சுய ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் எவ்வகையிலான ஆவணமும் பொறுப்பேற்கப்படும்:

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகின்ற கடவுச்சீட்டு;

iii. செல்லுபடியாகின்ற சாரதிகள் அனுமதிப் பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் மற்றும் மின்னியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என உறுதிப்படுத்தும் வகையில் முகக்கவசம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியாகும் வரையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தங்களது கையொப்பத்தினை அரசாங்க பாடசாலை அதிபர்/தமது பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர் அல்லது பிரபல நொத்தாரிசு ஒருவர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமை வணக்கத்துக்குரிய ஒருவரிடம் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

பரீட்சார்த்தி ஒருவர் தகைமை அற்றவர் என கண்டறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்த சந்தர்ப்பங்களிலும் அவருடைய பரீட்சார்த்தி அந்தஸ்த்து இரத்துச் செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி சமர்பித்துள்ள ஏதேனும் விடயம் தவறானது எனத் தெரிந்துகொண்டு அனுப்பியது அறியப்படுமிடத்து, இல்லாவிடின் ஏதேனும் முக்கிய விடயமொன்றை அவரால் வேண்டுமென்று மறைக்கப்பட்டிருந்தால் அவரை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

11. சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரியவருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்களமொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசாங்க ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு,
2025,செத்தெம்பர் 29.

10-66

---

## தொழில் திணைக்களம்

## தொழில் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

தொழில் திணைக்களத்தில் 2024.12.31 வெற்றிடமாக உள்ள மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் பின்வரும் பதவிகளுக்கு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின்படி, திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், அதாவது 2025.10.24 அன்று, கீழே பந்தி 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.0 **ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *தொடர் இலக்கம்* | *பதவியின் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 1 | வரைவாளர் | 3 |
| 2 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | 1 |
| 3 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | 1 |

1.1 பதவியின் / பதவிகளின் தன்மை: நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். (எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படும்.)

1.2 பதவிகளின் கடமைத் தன்மை :

| | *அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர்* | *கடமைகள்* |
|---|---|---|
| 1 | வரைவாளர் | பொறியியலாளரால் தயாரிக்கப்படும் திட்டங்களை வரைதல், நிறுவனத் தலைவரால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள். |
| 2 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | தொழில் செயலகக் கட்டிடம் மற்றும் தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான பிரதேச ரீதியாக அமைந்துள்ள தொழில் காரியாலயங்களின் திருத்தப் பணிகள், புதிய கட்டுமானங்களின் மேற்பார்வைப் பணிகள், மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஒப்பந்தக்காரர்களின் வேலைகளைச் சோதித்தல், அளவு சிட்டைகளைத் தயாரித்தல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் நிறுவனத் தலைவரால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள். |
| 3 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | புதிய மின்சார அமைப்புகளை உருவாக்குவதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், புதிய காற்றுப் பதனாக்கிகளைப் பொருத்துவதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் காற்றுப் பதனாக்கிகளின் பராமரிப்பு மற்றும் சேவைப் பணிகள், மின்சார அமைப்புகள் குறித்து பரிசோதித்தல், மேற்கூறிய பணிகளை நவீனமயமாக்குவதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், மின்பிறப்பாக்கிகளைப் பரிசோதித்தல் மற்றும் மின்சார உபகரணங்களில் ஏற்படும் கோளாறுகளை மின்னியலாளருடன் இணைந்து பரிசோதித்து பொறியியலாளருக்கு அறிக்கைகளை வழங்குதல், கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள தீயணைக்கும் உபகரணங்கள் தொடர்பான பணிகளைப் பரிசோதித்தல் மற்றும் அவற்றின் சேவைப் பணிகளை ஆய்வு செய்தல், ஒலிபெருக்கிகள் மற்றும் தொலைபேசி வலைப்பின்னல் சரிபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளல், திணைக்களத்திற்குள் வெளி நிறுவனங்களால் செய்யப்படும் மின் தொழில்நுட்பப் பணிகளைப் பரிசோதித்தல், மாவட்டக் காரியாலயங்களின் பராமரிப்பு மற்றும் சேவைப் பணிகளைப் பரிசோதித்தல் மற்றும் நிறுவனத் தலைவரால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள். |

2.0 **ஆட்சேர்ப்பு முறை :**

2.1 மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, விண்ணப்ப தாரிகளின் தகைமைகளுக்கமைய 3 தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்), பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் தரம் III (நேரடி ஆட்சேர்ப்பு) என்பனவாகும். ஒவ்வொரு தரத்திற்கும் உரிய தகைமைகள் 3.0 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் தரம் யாது என்பதை விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2.2 இந்தப் பிரிவின் கீழ் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு (எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில்) முதலாவதாக தரம் III இற்கும் (நேரடி ஆட்சேர்ப்பு), இரண்டாவதாக பயிற்சித் தரத்திற்கும் (ஒரு வருட பயிற்சிக் காலம்) மற்றும் மூன்றாவதாக பயிற்சித் தரத்திற்கும் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) ஆட்சேர்க்கப்படுவார்கள்.

2.2.1 தரம் III இன் (நேரடி ஆட்சேர்ப்பு) கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில், எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின்படி ஆட்சேர்க்க எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையிலானோர் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.2.2 III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட் சேர்ப்புச் செய்வதற்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குப் போதுமானதாக இல்லாதபோது, மீத முள்ள வெற்றிடங்களுக்காக பயிற்சித்

தரத்தின் (ஒரு வருட பயிற்சிக் காலம்) கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரர் களிலிருந்து, எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின்படி ஆட்சேர்க்க எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலானோர் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.2.3 மேலே உள்ள 2.2.1 மற்றும் 2.2.2 இற்கு அமைய தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குப் போதுமானதாக இல்லாதபோது, மீதமுள்ள வெற்றிடங்களுக்காக பயிற்சித் தரத்திற்கு (இரண்டு வருட பயிற்சிக் காலம்) அமைய தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின்படி ஆட்சேர்க்க எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலானோர் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.3 பொதுவான நேர்முகப் பரீட்சை: விண்ணப்ப தாரர்களின் உடல்நிலைத் தகுதியையும் சான்றிதழ் களையும் சரிபார்ப்பதற்காக நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

3.0 **தகைமைகள்:**

ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரங்களுக்குரிய தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

3.1 கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்

3.1.1 பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்)

(அ) கல்வித் தகைமைகள் :

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங் களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் கணிதம் (தூய கணிதம்/பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம்)/ உயிரியல் (விலங்கியல்/ தாவரவியல்), பௌதீ கவியல், இரசாயனவியல் மற்றும் தொழில்நுட்பவியல் (உயிர் முறை மைகள் தொழில்நுட்பவியல், பொறியியற் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ் ஞானம்) ஆகிய பாடங்களிலிருந்து 2 பாடங்களுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

3.1.2 பயிற்சித் தரம்: (ஒரு வருட பயிற்சிக் காலம்)

(அ) **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங் களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் கணிதம் (தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம்) / உயிரியல் (விலங்கியல்/தாவரவியல்), பௌதீ கவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களிலிருந்து 2 பாடங் களுடன் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள்:**

i. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன் றில், துறைக்குரிய பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து தேசிய தொழில் நுட்பச் சான்றிதழைப் பெற்றி ருத்தல்.

(உதாரணம்: தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் சிவில்/ மின்னியல் / இயந்திரவியல்

அல்லது

ii. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட

தொழில்நுட்பக் கல்லூரி யொன்றில் படம் வரைதல் தொடர்பான ஒரு வருட முழுநேரப் பயிற்சிப் பாட நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

iii. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன் றில், துறைக்குரிய கைத்தொழில் தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றி தழ் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, உரிய சான்றிதழைப் பெற் றிருத்தல்.

அல்லது

iv. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற் குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ் களை வழங்கும் நிறுவனங்களிடம் உசாவி கருத்துக்களைப் பெற்றதன் பின்னர், மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு வினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற் றிருத்தல்.

3.1.3 தரம் III (நேரடி ஆட்சேர்ப்பு) :

(அ) கல்வித் தகைமைகள் :

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் கணிதம் (தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம்)/ உயிரியல் (விலங்கியல் / தாவரவியல்), பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களிலிருந்து 2 பாடங்களுடன் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழில்சார் தகைமைகள்:

பின்வரும் தகைமைகளில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத் தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா.

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா.

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

(iv) இலங்கைத்திறந்தபல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா.

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I ஐ வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(vi) தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 6 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய் திருத்தல்

அல்லது

(vii) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற் குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ் களை வழங்கும் நிறுவனங்களிட மிருந்து உசாவி கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானதென மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற் றிருத்தல்.

3.2 **உடல் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்யவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

3.3 **ஏனைய தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடைய வராக இருத்தல் வேண்டும்.

III. ஏதேனும் மதமொன்றின் மதகுருவாக திருநிலைப் படுத்தப்பட்ட எவரும் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறமாட்டார்.

IV. விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அனைத்துத் தகுதிகளையும் மற்றும் குறிப்பிட்ட வயது எல்லையையும் சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அவர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவராக ஏற்றுக் கொள்ளப்படுவார்.

4.0 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஆகக்குறைந்த வயது 18 இற்குக் குறையாமலும் ஆகக்கூடிய வயது 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5.0 **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

5.1 பயிற்சித் தரத்திற்கு உள்வாங்கப்படும் விண்ணப்ப தாரர்கள், தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு நிறுவனத்தில் சம்பந்தப் பட்ட பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர், தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு நிறுவனத் தால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த தற்கான சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மீது, சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

5.2 பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள், மேலும் 6 மாதங்களுக்கு மிகாத காலப்பகுதிக்கு தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளனர். அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியின் முடிவில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

5.3 திறந்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப் படையில் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஓர் அலுவலர் 03 வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுவார். அவர் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தும், அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பூர்த்தி செய்தும், தகுதிகாண் காலப்பகுதியில் தனது உத்தியோகபூர்வ கடமைகள் மற்றும் நடத்தையை திருப்திகரமான முறையில் பேணியும் வந்திருந்தால், அவர் தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவார்.

5.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி, பதவியில் இணைந்து 3 வருடங்களுக்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக, மற்றைய அரச கரும மொழியில் உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.5 இந்த நியமனமானது, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் அவற்றின் திருத்தங்களுக்கும், திணைக்கள ரீதியான ஏனைய கட்டளைகளுக்கும், 2015, செத்தெம்பர் 01 ஆம் திகதிய 1930/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் சேவை பிரமாணக் குறிப்புக்கும், 2017.03.07 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி திருத்தப்பட்டதுமான ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனை களுக்கும், அந்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சேவை பிரமாணக் குறிப்பில் இனிவரும் காலங் களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டதாக இருக்கும்.

6.0 **சம்பள அளவுத் திட்டம் :**

6.1 தரம் III – அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 உடைய சம்பளச் சுற்றறிக்கையின் MN - 3-2025 இன்படி இந்த பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 52,250.00 – 10x800 - 11x1,190 - 10x1,320 – 10x1,350 - ரூ. 100,040.00 ஆகும்.

6.2 பயிற்சித் தரம் - அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன்படி கொடுப்பனவு

1 ஆம் வருடம் - ரூ. 41,317.00

2 ஆம் வருடம் - ரூ. 41,689.00

7.0 **எழுத்துமூலப் பரீட்சை:**

(அ) எழுத்துமூலப் பரீட்சையானது இரண்டு பாடங்களுக்கான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *பாடம்* | *கால அளவு* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. துறைசார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | 2 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். எல்லா பரீட்சார்த்திகளும் நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் துறைசார்ந்த தொழில்நுட்பப் பரீட்சையானது பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ப வேறுபடும். ஒவ்வொரு பதவிக்கும் உரிய பாடத்திட்டம் தொடர் இலக்கம் 8.0 இல் தரப்பட்டுள்ளது.

(இ) வெற்றிடங்களுக்காக நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி என்பன தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

8.0 **எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினாத்தாள்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான தன்மை, அவரது சிந்தனைப் பகுப்பாய்வு நிலை மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| 2. துறைசார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | (அ) **வரைவாளர் :**<br>i. மதிப்பீடுகளைத் திட்டமிடுதல், மதிப்பீடுகளைத் தயாரித்தல் பற்றிய அறிவு.<br>ii. திட்டங்களை வரைதல் மற்றும் உபகரணங்கள் பற்றிய புரிதல், கட்டுமானத் தொழில்நுட்பம் பற்றிய அறிவு.<br><br>(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)<br>i. கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்புப் பற்றிய அறிவு<br>ii. அளவுகளைப் பெறுதல் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல்/அளவைகளை எடுத்தல் மற்றும் மட்டங்களை அளவிடுதல் பற்றிய அறிவு<br><br>(இ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்)<br>i. மின்வழங்கல்/ மின்சுற்றுகள் பற்றிய அறிவு |

9.0 **பொதுவான நேர்முகப் பரீட்சை :**

பொதுவான நேர்முகப் பரீட்சையானது தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படுவதுடன் அதில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

****கவனிக்க:**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படலாகாது.

10.0 **பரீட்சைக் கட்டணம்:**

இந்தப் பரீட்சைக்கான கட்டணம் ரூ. 500.00 ஆகும். அக்கட்டணத்தை தொழில் ஆணையாளர் நாயகம் எனும் பெயரிலுள்ள மக்கள் வங்கியின், திம்பிரிகஸ்யாய கிளையின் 086100169026274 இலக்கமுடைய கணக்கிற்கு வரவு வைத்து, அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் பிரிக்க முடியாதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும்.

(இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை பரீட்சார்த்தி தனது கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.)

| |
|---|
| **குறிப்பு:** பரீட்சை இரத்துச் செய்யப்பட்டால் தவிர, பரீட்சைக் கட்டணம் எந்தக் காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. இந்தப் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. |

11.0 **விண்ணப்பிக்கும் முறை :**

11.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி, 21 × 29 செ.மீ. (A4) அளவுள்ள கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தை தாமே தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1.0 முதல் 6.0 வரையிலான தலைப்புகள் 01 ஆம் பக்கத்திலும், இல. 07.0 முதல் 11.1 வரையிலான தலைப்புகள் 02 ஆம் பக்கத்திலும், இல. 11.2 முதல் 11.3 வரையிலான தலைப்புகள் 03 ஆம் பக்கத்திலும், இல. 12.0 முதல் 15.0 வரையிலான தலைப்புகள் 04 ஆம் பக்கத்திலும், இல. 16.0-17, 05 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

11.2 விண்ணப்பப் படிவங்கள், தான் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலத்தில் தயாரிக்கப்பட வேண்டும்.

11.3 உரிய மாதிரிப் படிவத்துடன் ஒத்திராத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத முழுமையற்ற நிலையில் உள்ள விண்ணப்பப் படிவங்கள், எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

11.4 இந்தப் பரீட்சை, நவெம்பர் மாதம் கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டுமே நடத்தப்படும்.

11.5 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி எவ்வித அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. தபாலில் காணாமற்போகும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான முறைப்பாடு ஏதும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

11.6 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதலானது, விண்ணப்பதாரி இந்தப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படுவதாகக் கொள்ளப்படலாகாது.

11.7 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில், நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ப "தொழில் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் .. ..................................... பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (விண்ணப்பிக்கும் பதவியை இதிலுள்ள இடைவெளியில் உள்ளிடவும்.)

11.8 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நோத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானி மூலம் பெயரிடப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06 / 2006 இன் தரப்படுத்தலின்படி மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தில் அரச சேவையின் நிரந்தரப் பதவியை வகிக்கும் அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

11.9 இந்த வெற்றிடங்களை நிரப்பும், நிரப்பாமல் விடும் அல்லது அவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் நிரப்பும் தீர்மானத்தையும், இது பற்றிய ஏனைய அனைத்து விடயங்களையும் பற்றிய தீர்மானங்களையும் எடுப்பதற்கான இறுதி அதிகாரம் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கே உள்ளது.

12.0 **விண்ணப்பத்தை அனுப்புதல்**:

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், 2025.10.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

தொழில் ஆணையாளர் (நிர்வாகம்),
தொழில் திணைக்களம்,
8 ஆம் தளம்,
"மெஹெவரபியெச" கட்டடம்,
கொழும்பு 05

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு, இலங்கை மன்ற நிறுவகத்தில் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் பரீட்சைக்கான திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர்

பரீட்சார்த்திகளுக்கு கிடைக்கத்தக்கதாக தபாலில் அனுப்பப்படும்.

(ஆ) அனுமதிப் பத்திரத்தை தரவிறக்கம் செய்வதற்கென தாங்கள் விண்ணப்பத்தில் வழங்கிய கைத்தொலை பேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி மூலம் இணைப்பு ஒன்று வழங்கப்படும். இந்த இணைப்பின் மூலம் பரீட்சார்த்தி தங்களது தேசிய ஆளடையாள அட்டை இலக்கத்தைப் பதிவு செய்வதன் மூலம் அனுமதிப்பத்திரத்தை தரவிறக்கம் செய்யமுடியும். அனுமதிப் பத்திரம் தபால் மூலம் கிடைக்காத பரீட்சார்த்தி இந்த முறை மூலம் அனுமதி அட்டையைத் தரவிறக்கம் செய்யமுடியும், தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**14.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காக கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**15.0 பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்:**

பரீட்சார்த்தியொருவர் இந்த எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சை நடைபெறும்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. பரீட்சார்த்தி ஒருவர் தெரிந்துகொண்டே பொய்யான தகவலை வழங்கியிருப்பதாக கண்டறியப்பட்டால், அல்லது ஏதேனும் ஒரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருந்தால், அவர் சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

16.0 இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

தொழில் ஆணையாளர் நாயகம்.

தொழில் திணைக்களம்,
2025, செத்தெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தை பெட்டியினுள் இடுக. பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட வேண்டும்.)

02. 2.1 முதலெழுத்துக்களுடன் பெயர்(முதலெழுத்துக்கள் முடிவினில் வருமாறு) : ............................................................. (ஆங்கில பெரிய எழுத்தில்) உ-ம் (SILVA A.B.D.P.A.)

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................................................................................
..........................................................................................................................................................

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................................
..........................................................................................................................................................

03. 3.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்)
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

3.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..................................................................................................
.....................................................................................................................................................

04. பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐

(உரிய இலக்கத்தை பெட்டியினுள் இடுக)

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. விவாக நிலை : (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2) ☐
(உரிய இலக்கத்தை பெட்டியினுள் இடுக)

07. 7.1 பிறந்த திகதி: ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

7.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் (2025.10.24 தினத்தில்) வயது:

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

08. கையடக்கத் தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

09. மின்னஞ்சல் முகவரி : ☐

10. விண்ணப்பிக்கும் பதவி (உரிய இடத்தில் (✓) அடையாளத்தை இடுக.)

| *தொடர் இல.* | *பதவிப் பெயர்* | |
|---|---|---|
| 1 | வரைவாளர் | |
| 2 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | |
| 3 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | |

11. வர்த்தமானி அறிவித்தலின் 3.0 இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் தரம் (உரிய இடத்தில் (✓) அடையாளத்தை இடுக)

| | | |
|---|---|---|
| 1 | பயிற்சித் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | |
| 2 | பயிற்சித் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | |
| 3 | தரம் III (நேரடி ஆட்சேர்ப்பு) | |

12. கல்வித் தகைமைகள்:

12.1 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை: (முதலாவது அமர்வு)
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :................................
(ii) சுட்டிலக்கம் :................................
(iii) பெறுபேறுகள் :

| | *பாடம்* | *தரம்* | | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

12.2 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை: (இரண்டாவது அமர்வு)

(i) பரீட்சையின் வருடமும் மாதமும்: …………………………….

(ii) சுட்டிலக்கம் :………………...........................…………….

(iii) பெறுபேறுகள் :

| | *பாடம்* | *தரம்* | | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

12.3 க.பொ.த. (உயர் தர) பரீட்சை:

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :…………………………….

(ii) சுட்டிலக்கம் :…………………………….

(iii) பெறுபேறுகள்:

| | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

13. தொழில்சார் தகைமைகள்:

| *பாடநெறி* | *சான்றிதழ் வழங்கிய நிறுவனம்* | *பாடநெறியின் காலப்பகுதி* | *சான்றிதழின் இலக்கமும் செல்லுபடியாகும் திகதியும்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

14. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..........................................................................................................................................................................................

15. முன்பு எப்போதாவது உங்களது அசாங்க சேவை முடிவுறுத்தப்பட்டதா ? ........................................................................
..........................................................................................................................................................................................

அவ்வாறாயின், அவ்விபரங்களையும் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் தருக : ..........................................
..........................................................................................................................................................................................

16. பரீட்சைக் கட்டணம் -

16.1 செலுத்திய தொகை : .......................................................................................................

16.2 செலுத்தப்பட்ட வங்கி : ........................................................................

16.3 செலுத்திய திகதி : ........................................................................................................

16.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை அதன் ஓரங்களில் இருந்து பிரியாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்) |

17. விண்ணப்பதாரரின் சான்றுரை:

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சட்ட விதிமுறைகளுக்கும் அமைய, திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ........................................................................................................................ ஆகிய நான், தகுதியுடையவன் என்றும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையிலும் நம்பிக்கையின்படியும் உண்மையானவை என்றும் உறுதியளிக்கிறேன். மேலும், பரீட்சை சட்டவிதிமுறைகளுக்கு அமைய செயற்படவும், இந்த பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய நான் தகுதியற்றவன் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சை நடைபெறும்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ, எவ்வித நட்டஈடும் இன்றி எனது பரீட்சைக்கான தகைமையை இழக்கச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் நான் உடன்படுகிறேன். அத்துடன், பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் உறுதியளிக்கிறேன். நான் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்றுவதற்குச் சம்மதிக்கிறேன்.

திகதி:..................................................          ..............................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

18. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்: (வர்த்தமானி அறிவித்தலின் 11.7ஆம் பந்திக்கு அமைவாக)**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ................................................................................. (விண்ணப்பதாரரின் முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும், ........................ ஆம் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பம் இடப்பட்டது என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி: ..............................          …………………………………………………………………………

(கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்)

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :.............................................................

பதவி:.......................................................................................................................................

முகவரி:.........................................................................................................................

(அலுவலக முத்திரையுடன் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்)

10-67

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

### அட்டவணை - 2025

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2025 |
| **திசெம்பர** | .. | வெள்ளி | 05.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2025 |
| | | வெள்ளி | 12.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2025 |
| | | வெள்ளி | 19.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2025 |
| | | வெள்ளி | 26.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*